நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை

போலியோ(Polio) தடுப்பூசி

பெற்றோர் தகவல் தாள்

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் (NIP) கீழ் சில தடுப்பூசிகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் இலவசமாக வழங்குகிறது.

கே. போலியோ (polio) என்றால் என்ன?

போலியோ (polio) என்பது ஒரு வைரஸ் நோய்த்தொற்று ஆகும், இது பக்கவாதம் மற்றும் மரணத்தை ஏற்படுத்தும். போலியோ (polio) நோயுள்ள பெரும்பாலானவர்களுக்கு எந்த நோயறிகுறியும் இல்லை. 10% பேருக்கு காய்ச்சல், தலைவலி, சோர்வு, குமட்டல் மற்றும் வாந்தி இருக்கலாம், ஆனால் அவர்கள் பொதுவாக குணமடைந்து விடுவார்கள்.

சுமார் 2% நோயாளிகளுக்குக் கடுமையான தசை வலி மற்றும் முதுகு அல்லது கழுத்தில் விறைப்புத் தன்மையை வைரஸ் ஏற்படுத்துகிறது. 1% க்கும் குறைவானவர்களுக்குப் பக்கவாதம் ஏற்படுகிறது, இது கைகள், கால்கள், கழுத்து அல்லது சுவாசத் தசைகளைப் பாதிக்கக்கூடும்.

கே. போலியோ (polio) எவ்வாறு பரவுகிறது?

பாதிக்கப்பட்ட நபரின் மிகச் சிறிய அளவிலான மலம் அல்லது உமிழ்நீருடனான தொடர்பின் மூலம் போலியோ (polio) பரவுகிறது. கைகளைச் சரியாகக் கழுவவில்லை என்றால் இது நிகழலாம்.

வைரஸானது மூக்கு அல்லது வாய் வழியாக நுழைந்து, குடலைப் பாதித்து, இரத்தம் மற்றும் நரம்பு மண்டலத்திற்குப் பரவக்கூடும். போலியோ (polio) நோயால் பாதிக்கப்பட்டவர்கள், நோயறிகுறிகள் தோன்றுவதற்கு 10 நாட்களுக்கு முன்பிலிருந்து, நோயறிகுறிகள் தோன்றிய 10 நாட்கள் வரை மிக அதிகமாகத் தொற்றைப் பரப்புபவர்களாக இருக்கிறார்கள்.

கே. தடுப்பூசிகள் எப்படி வேலை செய்கின்றன?

நோயெதிர்ப்புச் சக்தியானது தொற்றுநோய்களை எதிர்த்துப் போராட தடுப்பூசிகள் உதவுகின்றன. தடுப்பூசி போடப்பட்ட நபர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டால், அவரது உடல் நோயை சிறப்பாக எதிர்த்துப் போராட முடியும் அல்லது அதன் தீவிரத்தை குறைக்க முடியும்.

கே. போலியோ (polio) தடுப்பூசி எவ்வளவு சக்தியுள்ளதாக இருக்கும்?

போலியோ (polio) தடுப்பூசியின் முழுமையான அளவு (3 டோஸ்கள்) நோயைத் தடுப்பதில் 99% திறனுள்ளதாக இருக்கும்.

கே. யாருக்குத் தடுப்பூசி போட வேண்டும்?

போலியோ (polio) தடுப்பூசியின் 3 டோஸ்களும் எடுத்திருக்காத இளம் பருவத்தினர் அவசியம் தடுப்பூசி போட வேண்டும்.

கே. யாருக்கு தடுப்பூசி போடக் கூடாது?

பின்வருபவர்களுக்குத் தடுப்பூசி போட வேண்டாம்:

- **முந்தைய டோஸில் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (anaphylaxis) கொண்டிருந்தவர்கள்**
- **தடுப்பூசியில் உள்ள ஒரு மூலப்பொருளுக்குக் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை கொண்டிருந்தவர்கள்.**

கே. அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) என்றால் என்ன?

அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) என்பது மிகவும் அரிதான ஆனால் கடுமையான ஒவ்வாமை எதிர்வினையாகும். அது சுயநினைவை இழக்க வைக்கும் அல்லது விரைவாக சிகிச்சையளிக்கப்படாத பட்சத்தில், மரணத்தை ஏற்படுத்தும். நோய்த்தடுப்பு வழங்குநர்கள் அனாஃபைலாக்ஸிஸை (anaphylaxis) நிர்வகிக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.

கே. என் குழந்தைக்கு போலியோ (polio) தடுப்பூசி போடப்பட்டுள்ளதா என்பது எனக்குத் தெரியாவிட்டால் என்ன செய்வது?

உங்களிடம் பதிவுகள் இல்லையென்றால், உங்கள் குழந்தைக்கு இப்போதும் பாதுகாப்பாகத் தடுப்பூசி போடலாம்.

கே. போலியோ (polio) தடுப்பூசியில் என்ன இருக்கிறது?

தடுப்பூசியில் பின்வருவன சிறிய அளவில் உள்ளன:

- **ஃபீனாக்ஸிஎத்தனால் (phenoxyethanol), ஃபார்மால்டிஹைடு (formaldehyde) மற்றும் பாலிசார்பேட் 80 (polysorbate 80)**
- **நியோமைசின் (neomycin), ஸ்ட்ரெப்டோமைசின் (streptomycin) மற்றும் பாலிமைக்சின் பி (polymyxin B)**
- **பசுமாட்டின் சீரம் அல்புமின் (bovine serum albumin).**

இந்த மூலப்பொருட்கள் தடுப்பூசி வேலை செய்ய அல்லது பாதுகாக்க உதவுகின்றன. உற்பத்தியின் போது இது பசு மாட்டிலிருந்து பெறப்பட்ட பொருட்களுடனும் உட்படுத்தப்பட்டது.

கே. தடுப்பூசிகள் எவ்வளவு பாதுகாப்பானவை?

ஆஸ்திரேலியாவிலுள்ள தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை. சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தின் (TGA) ஒப்புதலுக்கு முன் அவை கடுமையான பாதுகாப்புச் சோதனைகளைக் கடக்க வேண்டும். பயன்பாட்டிற்குப் பிறகு தடுப்பூசிப் பாதுகாப்பையும் TGA கண்காணிக்கிறது.

கே. போலியோ (polio) தடுப்பூசியின் பக்க விளைவுகள் என்ன?

பக்க விளைவுகள் பொதுவாக வீரியம் குறைந்தவை மற்றும் அவற்றில் பின்வருவன அடங்கும்:

- **ஊசி போடப்பட்ட இடத்தில் சிவந்து போதல், வலி அல்லது வீக்கம்.**
- **காய்ச்சல்.**

தீவிர பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை.

மேலும் தகவல்களுக்கு, health.nsw.gov.au/schoolvaccination என்ற இணையதளத்தில் உள்ள நுகர்வோர் மருந்து பற்றிய தகவல்களைப் (CMI) பார்க்கவும். பக்க விளைவுகள் பற்றிய கவலை உங்களுக்கிருந்தால், உங்கள் பொது மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும்.